**IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.**

**S.C.No.138/2013**

Date: 29.02.2024.

**PW–10: ஜெயா**

சாட்சி இன்று மீண்டும் மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரிகள் 1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

**A1 to A3, A5, A6, A7, A9, A13 to A17 present. A8, A11 & A18 called absent. Petition u.sec.317 Cr.P.C filed and allowed.**

**1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் வங்குடி மேலத்தெருவில் வசிக்கிறேன். தேசிங்குபாலன் கொலை வழக்கில் நான் சாட்சி சொல்லவில்லை. நான் எனது முதல்விசாரணையில் சொன்னதுபோல் எந்தவொரு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், நான் எந்த சம்பவத்தையும் பார்க்கவில்லை என்றாலும், போலிசார் சொல்லிகொடுத்து பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

வழக்கமாக நான் காலை நேரத்தில் புறப்பட்டு விவசாய கூலி வேலைக்கு போய்விடுவேன் என்றால் சரிதான். காலை 6.00 மணிக்கு நான் புறப்பட்டு வேலைக்கு சென்றுவிட்டு பிற்பகல் 4.00 மணிக்குதான் வருவேன் என்றால் காலை 9.30 மணிக்கு புறப்பட்டு சென்றுவிட்டு மதியம் 2.30 மணிக்கு வருவேன். நான் பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும் வழக்கமாக நான் காலை 6.00 மணிக்கு வேலைக்கு போய்விட்டு பிற்பகல் 2.30 மணிக்கு வந்துவிடுவேன் என்றாலும் சரியல்ல.

மல்லிகா வீட்டின் முன்பாக தார்ரோடு இருக்கிறது என்றால் சரிதான். போலிசார் என்னை இந்த வழக்கு சம்மந்தமாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. விசாரித்தார்கள். போலிசார் என்னிடம் கையொப்பம் வாங்கினார்களா என்று நினைவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவேயில்லை என்றாலும், விசாரித்ததாக பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல.

மற்ற சங்கதிகளை பொறுத்து இதர எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

**மறுவிசாரணை இல்லை.**

Sd/- G. Sri Rama Jeyam,
III Additional District Judge,
Salem.